# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, சென்னை –600 032.
தொலைபேசி: 044–22201337/நிகரி எண் 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).

-------------

முறையீட்டு மனு எண்: 0078/2017/ந

ஆணை எண்: 133/2017

நாள்: 25/05/2017

திரு. B. திருச்செல்வன்,
த/பெ பலராமன்,
8/31, 36வது தெரு,
அசோக் நகர்,
சென்னை – 600 083. – முறையீட்டு மனுதாரர்

திரு. ராஜா,
ஆற்காடு நகராட்சி,
ஆற்காடு. – எதிர் மனுதாரர்

## ஆணை

முறையீட்டு மனுதாரரது 13.04.2017 நாளிட்ட முறையீட்டு மனு 13.04.2017 அன்றே இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு முறையீட்டு மனு எண்.0078/17 ஆக பதிவு செய்யப்பட்டது.

மேற்படி மனுவில் ஆற்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதியில் "சாய்பாபா நகர்" என்ற பெயரில் மனைப் பிரிவுகளை ஏற்படுத்தியுள்ளதாகவும், திரு. ராஜா என்பவர் தொடர்ந்து புகார்கள் தெரிவித்து வருவதால் மேற்படி மனைப்பிரிவுக்கான அனுமதி இன்றும் வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இம்முறைமன்ற நடுவ 19.04.2017 நாளிட்ட அழைப்பாணை மூலம் 29.05.2017 அன்று இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு ஆஜராகுமாறு முறையீட்டு மனுதாரருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

இதனிடையே முறையீட்டு மனு கூர்ந்தாய்வு செய்யப்பட்டது. மேற்படி மனுவில் திரு.ராஜா என்ற ஒரு தனிப்பட்ட மூன்றாம் நபர் மட்டுமே எதிர்மனுதாரராக சேர்க்கப்பட்டுள்ளார். 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 2 (11)ன்படி

உள்ளாட்சி அமைப்பின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்பின் கீழ் பணியாற்றிவரும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மீதான ஊழல் மற்றும் நிர்வாக சீர்கேடு தொடர்பான முறையீடுகளே இம்முறைமன்ற நடுவ விசாரணை வரம்பிற்குட்படுத்தப்பட வேண்டியன ஆகும். எனவே, தனிப்பட்ட மூன்றாம் நபர் மீதான புகார் குறித்தும், தீர்வு குறித்தும் நடவடிக்கை எடுத்தல் 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்ட வரம்பிற்குட்பட்டதல்ல என தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது. அதன்படி, 29.05.2017 அன்று நிர்ணயிக்கப்பட்டிருந்த மனுதாருக்கான இம்முறைமன்ற நடுவ விசாரணையும் ரத்து செய்து ஆணையிடப்படுகிறது.

மேலும், மனுதாரர் தனது கோரிக்கை குறித்து ஆற்காடு நகராட்சி ஆணையரிடம் முறையீடு செய்து கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு மே திங்கள் 23-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//-
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

23.5.17

23.5.17

**பெறுநர்**

1. திரு. B. திருச்செல்வன்,
   த/பெ. பலராமன்,
   8/31, 35வது தெரு,
   அசோக் நகர்,
   சென்னை – 600 083.

2. நகராட்சி ஆணையர்,
   ஆற்காடு நகராட்சி,
   ஆற்காடு, வேலூர் மாவட்டம்.